*53*

# பதிலுக்கானது எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்

## *படிப்பதற்காக கொடுக்கப்பட்டவைகள் #21*

VI. *மூன்றாவது பஸ்காவிலிருந்து இயேசு பெத்தானிக்கு வந்து சேர்ந்தது வரை (தொடர்ச்சி).*

M. *எருசலேமில்: கூடாரங்களின் பண்டிகை (தொடர்ச்சி).*

*3. பண்டிகைக்குப் பின்பு: கூடுதல் போதனை (தொடர்ச்சி).*

b. *வெளிச்சம் மற்றும் இருள் பற்றிய போதனை (யோவா. 8:12-59).*

c. *உடல்ரீதியான மற்றும் ஆவிக்குரிய பார்வையற்ற தன்மைகள் பற்றிய போதனை (யோவா. 9:1-41).*

d. *நல்ல மேய்ப்பன் மற்றும் கூலியாட்கள் பற்றிய போதனை (யோவா. 10:1-21).*

### அறிமுகம்

*முந்திய பாடத்தில், இயேசுவும் அவரது சீஷர்களும் கூடாரங்களின் பண்டிகைக்காக எருசலேமுக்கு வந்திருந்தார்கள். பண்டிகைக்குப் பின்பு, போதிப்பதற்காகக் கிறிஸ்து ஒரு சில நாட்கள் கூடுதலாக அங்கு தங்கினார். அந்தப் பாடமானது நன்கு பழக்கப்பட்ட ஒரு நிகழ்ச்சியுடன் முடிந்தது: விபசாரத்தில் பிடிக்கப்பட்ட ஒரு பெண். இந்தப் பாடம், முந்திய பாடம் முடிந்த இடத்தில் தொடங்கும்.*

*இந்தப் பாடத்தில் உள்ள நிகழ்ச்சிகள் யோவானால் மாத்திரம் பதிவுசெய்யப் பட்டுள்ளன. இந்த செயல்பாடு யாவும் எருசலேமில் அல்லது அதற்கு அருகில் நடைபெற்றன (யோவா. 8:20, 59; 9:7), இவைகள் அநேகமாக கூடாரங்களின் பண்டிகைக்குச் சற்றுப் பிற்பாடு நடைபெற்றிருக்கலாம்.[1]*

*வேத பாடப் பகுதியானது, இயேசுவுக்கும் எருசலேமில் இருந்த மதரீதியான உயர் அதிகார வர்க்கத்தினருக்கும் இடையில் எழுந்த மோதலை மையங்கொண்டுள்ளது. தலைவர்களிடத்தில் அவர், "உங்களைக் குறித்துப் பேசவும் நியாயந்தீர்க்கவும் எனக்கு அநேக காரியங்களுண்டு" என்று கூறியிருந்தார் (யோவா. 8:26). இந்த இடத்திலிருந்து, அவர் தம்மை வெளிப்படுத்துதலுடன் கூடுதலாக அவர் தமது விரோதிகள் பற்றிய விஷயங்*

*களையும் வெளிப்படுத்துவார். வேத வசனத்தின் இந்தப் பகுதியில், அவர் தமக்கும் அவர்களுக்கும் இடையில் - எடுத்துரைக்கப்பட்ட அல்லது மறைமுகமாய் உணர்த்தப்பட்ட - பல நேர்மாறுகளை வெளிக்கொண்டு வந்தார்:*

| கிறிஸ்து | அவரது விரோதிகள் |
|---|---|
| *உலகின் ஒளி (8:12)* | *இருளில் உள்ளனர் (யோவா. 8:12)* |
| *சத்தியமான நியாயத்தீர்ப்பு (8:16)* | *மாம்சப்பிரகாரமான நியாயத்தீர்ப்பு (8:15)* |
| *உயர்விலிருந்து உண்டானவர் (8:23)* | *தாழ்விலிருந்து உண்டானவர்கள் (8:23)* |
| *உலகத்திலிருந்து உண்டானவரல்ல (8:23)* | *உலகத்திலிருந்து உண்டானவர்கள் (8:23)* |
| *பிதா: தேவன் (8:38)* | *பிதா: பிசாசு (8:44)* |
| *தேவனை அறிந்தவர் (8:55)* | *தேவனை அறியாதவர் (8:55)* |
| *சத்தியம் நிறைந்தவர் (8:14, 40, 45, 46)* | *பொய்யர்கள் (8:44, 55)* |
| *நல்ல மேய்ப்பர் (10:11, 14)* | *கூலியாட்கள் (10:12, 13)* |

*கிறிஸ்து தம்மைப் பற்றிய உரிமைகோருதல்களில் மிகவும் தைரியமான வராகிக் கொண்டிருந்தார். இந்தப் பாடத்திற்காக படிப்பதற்குக் கொடுக்கப்பட்ட வசனப் பகுதிகளில் யோவானால்[2] பதிவு செய்யப்பட்ட "நான் இருக்கிறேன்" என்ற கூற்றுகள் ஏழில் மூன்று கூற்றுகள் உள்ளன. இயேசு, "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன்" (யோவா. 8:12; 9:5) என்றும் "நானே நல்ல மேய்ப்பன்" (யோவா. 10:11, 14) என்றும் கூறினார்.[3] ஆயினும் அவர், "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்று கூறியதுதான் (8:58) அவரது துடுக்குத்தனம் மிகுந்த கூற்றாக இருந்தது. இது, அவர் ஆபிரகாமுக்கு முன்பே தாம் இருந்ததாக உரிமைகோரியதாக இருந்தது, ஆனால் இது அதை விட அதிகமானதாக இருந்தது: இது தெய்வீகத்துவத்தின் ஒரு உறுதிப்பாடாக இருந்தது.*

*இயேசுவுக்கும், அந்த நாட்களில் ஆவிக்குரிய வகையில் நிரூபணத்தில் ஆதாரமற்றிருந்த தலைவர்களுக்கும் இடையில் இருந்த நேர்மாறானது இந்தப் பாடத்திற்கான தலைப்பைக் கருத்தாகத் தெரிவித்தது. ஒரு உற்பத்திப் பொருள் நன்கு விற்பனையாகும்போது, அதைப் போன்ற போலிகள் சந்தையில் பெருக்கெடுக்கின்றன, இவைகள் பெரும்பாலும் தரம் குன்றிய போலிப் பொருட்களாக உள்ளன. அது நடைபெறும்போது, உண்மையான உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பவர்கள் சிலவேளை களில், "பதில் ஈடுகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள்" என்ற வார்த்தைகளைத்*

*தங்கள் விளம்பரத்தில் சேர்க்கின்றார்கள். இன்றைய நாட்களில் பலர், உலகத்தின் ஒரே நம்பிக்கை என்ற வகையில் கிறிஸ்துவை (ஏற்றுக் கொள்ளாமல்) புறக்கணித்து பல்வேறு மாற்றுக்களை முன்மொழிகின்றார் கள். ''கர்த்தருக்குப் பதிலாக மாற்றுக்களை ஏற்றுக்கொள்ளாதீர்கள்'' என்பதே நமது படிப்பின் வலியுறுத்தமாக உள்ளது.*

## வேறு ஒளியை ஏற்றுக்கொள்ளாதீர்கள்
## *(யோவா. 8:12-59)*

*நமது பாடத்தின் துவக்கத்தில், இயேசு தேவாலயத்தில் ''தருமப் பெட்டியிருக்கும் இடத்தில்'' (வ. 20) போதித்துக் கொண்டிருந்தார் (வ. 20, 59). தருமப் பெட்டியிருக்கும் இடம் என்பது எக்காள வடிவில் பதிமூன்று காணிக்கைப் பெட்டிகள் பெண்களின் முற்றத்தில்[4] வைக்கப்பட்டிருந்த இடமாகும் (மாற். 12:41, 43; லூக். 21:1ஐக் காணவும்). இது சனதெரீன் சங்கம் கூடிவந்த இடத்திலிருந்து அதிக தொலைவில் இல்லை.*

*முந்திய பாடத்தில், கிறிஸ்து கூடாரங்களின் பண்டிகையில் நடைபெற்ற தண்ணீர்ச் சடங்கை எடுத்துரைக்கும் "ஜீவத் தண்ணீர்" என்ற ஒரு உருவகத்தை அளித்திருந்தார். இப்போது அவர், தாமே "உலகத்துக்கு ஒளியாக" இருப்பதாக அறிவித்தார், இது ஒருவேளை, பண்டிகையின்போது பெண்களின் முற்றத்தில் தொங்கவிடப்பட்டிருந்த சரவிளக்கினால் கருத்தாகத் தெரிவிக்கப்பட்ட ஒரு அடையாளமாக இருக்கலாம்.[5] "மறுபடியும் இயேசு ஜனங்களை நோக்கி: 'நான் உலகத்திற்கு ஒளியாயிருக் கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன் இருளிலே நடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்' என்றார்" (வ. 12). ஹெஸ்டர் அவர்கள், "என்ன ஒரு உரிமைகோருதல் - இது உண்மையானதாக இருந்திருக்க வேண்டும் இல்லை யென்றால் இது மனிதரால் கூறப்பட்டவற்றிலேயே மிகவும் வஞ்சனையான உச்சரிப்பாக இருந்திருக்க வேண்டும்" என்று விளக்கம் அளித்தார்.[6]*

*கிறிஸ்துவின் தைரியமிக்க வார்த்தைகள் இந்த அத்தியாயத்தின் முடிவு வரையிலும் செல்லக்கூடிய சூடான விவாதம் ஒன்றை யூதத்துவ அதிகாரி களிடத்தில் தூண்டிவிட்டன. இந்த விவாதமானது அத்தியாயம் 7ல் உள்ள வாக்குவாதத்தின் பின்தொடர்ச்சியாகவும் அதிகாரம் 5ல் உள்ள போராட்டத்தின் பொருளடக்கத்தைப் போன்றதாகவும் இருந்தது. இந்த அத்தியாயத்தில் மாபெரும் ஆய்வுப் பொருட்கள் பல அறிமுகப்படுத்தப் படுகின்றன, ஆனால் இந்தப் பிறழ்வுகளைப் பின்பற்றுவதற்கும் கலந்துரை யாடலைத் திருப்புவதற்கும், இந்தப் புத்தகத்தின் இடமானது நம்மை அனு மதிப்பதில்லை. நாம் சிறப்பான முக்கியத்துவம் வாய்ந்த கருத்துக்களை மாத்திரம் படிப்போம்.*

### *சத்தியத்தின் ஒளி*

*இயேசுவிடம் யூதத் தலைவர்கள், "நீர் யார்?"; "... உன்னை நீ எப்படிப் பட்டவனாக்குகிறாய்?" என்று கேட்டு அறைகூவல் விடுத்தார்கள் (8:25அ, 53ஆ). இன்றைய நாட்களில் நாம் யாரேனும் ஒருவரிடத்தில், "சரி, நீங்கள்*

யாரென்று நினைத்துக் கொண்டிருக்கின்றீர்கள்?" என்று கேட்கலாம்.[7] கிறிஸ்து அவர்களுக்குத் தாம் யார் என்பதையும் தமது ஊழியம் என்ன என்பதையும் கூறத் தயங்காதிருந்தார். இயேசு உலகத்தின் ஒளியாக இருக்கின்றார் என்ற அவரது கூற்றை நாம் ஏற்கனவே ஆழ்ந்து சிந்தித்துள்ளோம் (வ. 12) அத்துடன் கூடுதலாக அவர் பின்வருமாறு அறிவித்தார் ...

... அவரது வார்த்தைகள் உண்மையாய்/சத்தியமாய் இருந்தன (வ. 14, 16).
... அவர் உயர்விலிருந்து உண்டானவர் (வ. 23).
... அவர் தேவனால் அனுப்பப்பட்டவர்[8] (வ. 26).
... அவர் தமக்குத் தேவன் போதித்தவற்றையே பேசினார் (வ. 26, 28).
... அவர் தேவனுக்குப் பிரியமானவற்றையே செய்தார் (வ. 29).

அவர் தேவனுக்குப் பிரியமானவற்றை மாத்திரமே செய்தார் என்பது பற்றி, நான் வசனம் 46ல் அவரது அறைகூவலைக் குறிப்பிட்டாக வேண்டும்: "என்னிடத்தில் பாவம் உண்டென்று உங்களில் யார் என்னைக் குற்றப் படுத்தக் கூடும்?" இது, NIVயில் "உங்களில் எவராவது நான் பாவத்தினால் குற்றப்பட்டிருப்பதாக நிரூபிக்க முடியுமா?" என்றுள்ளது. நீங்களும் நானும் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டால், நம்மை நன்கு அறிந்துள்ளவர்கள், நாம் செய்துள்ள பாவங்களைப் பற்றிய மூன்றடி நீளமுள்ள பட்டியல் ஒன்றுடன், ஒரிரு நிமிடங்களிலேயே நம் முன்பாக வரக்கூடும். ஆயினும் இயேசுவை எவரொருவராலும் குற்றப்படுத்த முடியாதிருந்தது[9]; அவர் "பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி. 4:15).

யோவான் 8:25ல், "நீர் யார்?" என்ற அவர்களின் கேள்விக்குப் பதிலுரையாக இயேசு உண்மையில் பின்வருமாறு கூறினார்:

- "நீங்கள் கொலைசெய்யத் தேடுகிறவர் நானே" (வ. 37, 40).
- "என்னையே நீங்கள் உயர்த்தப் போகின்றீர்கள்" (இது சிலுவையில் அவரது மரணத்தைக் குறித்தது) (வ. 28; யோவா. 3:14; 12:32ஐக் காணவும்).
- "நான் பரலோகத்திற்குச் செல்லப் போகிறவராயிருக்கிறேன்" (இது அவர் பரத்துக்கேறுதலைக் குறித்தது; 8:21).
- "இரட்சிக்கப்படுவதற்கு நீங்கள் என்னைத்தான் விசுவாசித்தாக வேண்டும்" (வ. 24,[10] 30, 46).

வசனம் 30, "இவைகளை அவர் சொல்லுகையில், அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள்" என்று கூறுகிறது. "அவரிடத்தில் விசுவாசம் வைத்தவர்களில்" சிலர் யூத உயரதிகார மட்டத்தைச் சேர்ந்தவர்களுமாய் இருந்தார்கள் என்பது திகைப்புக்குரியதாக உள்ளது (வ. 31;[11] யோவா. 9:16ஐ முன்னதாக கண்ணோக்குங்கள்).[12] நிக்கொதேமு என்பவர் இவர்களில் ஒருவராயிருந்தார் (யோவா. 7:50); இன்னொருவர் அரிமத்தியாவூர் யோசேப்பு என்பவராயிருந்தார் (மாற். 15:43; லூக். 23:50, 51; யோவா. 19:38); அநேகமாக மற்றவர்களும் இருந்தார்கள் (யோவா. 12:42ஐக்

*காணவும்).*

*கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசம் இரகசியமானதாக இருக்கக் கூடாது, ஆனால் அது செயல்விளக்கப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். "இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: 'நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்' என்று கூறினார்" (யோவா. 8:31). மீண்டும் அவர், "ஒருவன் என் வார்த்தையைக் கைக்கொண்டால், அவன் என்றென்றைக்கும் மரணத்தைக் காண்பதில்லை ..." என்று கூறினார் (வ. 51). விசுவாசம் மாத்திரம் போதுமானதாக இருப்பதில்லை.*

***தவறின் இருள்***

*யூதத்துவத் தலைவர்களில் ஒரு சிலர் கிறிஸ்துவினால் மனம் ஈர்க்கப் பட்டிருக்கலாம் என்றிருக்கையில் பெரும்பாலானவர்கள் அவ்வாறு மனம் ஈர்க்கப்படவில்லை. அவர்களில் பெரும்பாலானவர்கள், அவரல்ல ஆனால் தாங்களே ஒளியூட்டப்பட்டு இருந்ததாகவும், ஒளி மற்றும் புரிந்து கொள்ளுதலின் ஆதாரமூலமாக இருந்ததாகவும் நம்பினார்கள். மற்றும் இயேசு, அவர்கள் அறிவு (வ. 14) மற்றும் புரிந்துகொள்ளுதல் (வ. 43) ஆகியவற்றில் குறைவுபட்டிருந்தார்கள் என்று கூறியது அவர்களை மூர்க்கமடையச் செய்திருந்தது. புரிந்துகொள்ளுதலில் அவர்களின் தோல்வி பற்றிய பல உதாரணங்கள் இந்த அத்தியாயத்தில் அடங்கியுள்ளன:*

*கிறிஸ்து தமது பிதாவைப் பற்றிப் பேசியபோது (வ. 18), அவர் தமது பரலோகத்தின் பிதாவைப் பற்றிக் குறிப்பிட்டார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை (வ. 19; வ. 27ஐயும் காணவும்).*

*இயேசு தாம் செல்லப் போவதாகவும், தாம் செல்லும் இடத்திற்கு அவர்களால் வரக்கூடாது என்றும் கூறியபோது (வ. 21), அவர் பரலோகத் திற்குச் செல்லுதல் பற்றிக் கூறினார் என்பதை அவர்கள் புரிந்துகொள்ள வில்லை. அவர் தற்கொலை செய்துகொள்ளுதல் பற்றிப் பேசுகின்றாரோ என்று அவர்கள் யூகம் செய்தார்கள் (வ. 22).*

*சத்தியம் அவர்களை விடுதலையாக்கும் என்று கர்த்தர் அறிவித்தபோது (வ. 32[13]), அவர்கள் அரசியல்ரீதியான விடுதலையைப் பற்றி நினைத்துக் கொண்டு, "நாங்கள் ஆபிரகாமின் சந்ததியாயிருக்கிறோம், நாங்கள் ஒருக்காலும் ஒருவனுக்கும் அடிமைகளாயிருக்கவில்லை"[14] என்று கூறினார் கள் (வ. 33அ). [ஆனால்] இயேசுவோ, ஆவிக்குரிய விடுதலையை - விசேஷமாக பாவத்தின் குற்ற உணர்வு மற்றும் அதன் அதிகாரம் ஆகியவற்றி லிருந்து விடுதலையை - தமது சிந்தையில் கொண்டிருந்தார் (வ. 34,[15] 36).*

*ஆபிரகாமின் மாம்சத்திற்குரிய சந்ததியாக இருப்பது என்பதே முக்கியமானது என்று அவர்கள் நினைத்தார்கள் (வ. 33, 39, 53, 56). விசுவாசத்தின் மனிதரான அவரது ஆவிக்குரிய சந்ததியாயிருத்தல் என்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அவர்கள் உணர்ந்தறியவில்லை (வ. 37, 39; ரோமர் 2:28, 29ஐக் காணவும்).*

*அவர்கள் தேவனே தங்கள் ஆவிக்குரிய தந்தை என்றும் நினைத்தார்கள் (வ. 41). இயேசுவைப் புறக்கணிப்பதில் அவர்கள் தங்களின் உண்மையான*

*பிதாவான பிசாசின் சித்தத்தைச் செயல்படுத்துவதை அவர்கள் காணாதிருந்தார்கள் (வ. 37, 38, 40, 41, 44[16]).*

*கிறிஸ்து, தம்மை விசுவாசிப்பவர்கள் மரணத்தைக் காணமாட்டார்கள் என்று கூறியபோது (வ. 51), அவர் உடல்ரீதியான மரணத்தைக் குறிப்பிட்டார் என்று [யூதத்துவத்] தலைவர்கள் நினைத்தார்கள் (வ. 52, 53). இருப்பினும் இயேசு, ஆவிக்குரிய மரணத்தையே தமது சிந்தையில் கொண்டிருந்தார்: அவரில் விசுவாசம் கொண்டு அவரது வசனத்தைக் கைக்கொள்ளுகின்றவர்கள் இந்த வாழ்வில் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட மாட்டார்கள் (ஆவிக்குரிய மரணம், எபே. 2:1; 1 தீமோ. 5:6), இந்த வாழ்வுக்குப்பின்பு அவர்கள் நரகத்திற்குச் செல்லவுமாட்டார்கள் (இரண்டாம் மரணம்; வெளி. 20:14; 21:8).*

*ஆபிரகாம், கிறிஸ்துவின் நாளைக் காண ஆசையாயிருந்தார்; மற்றும் கண்டு களிகூர்ந்தார் (வ. 56) என்று அவர் [கிறிஸ்து] கூறியபோது, அவர் மதியீனமாகப் பேசுவதாக அவர்கள் நினைத்தார்கள் (வ. 57; வ. 48,[17] 52ஐக் காணவும்; யோவா. 10:20). இயேசுவோ தாம் முன்பே இருந்த நிலைமையை உரிமைகோரினார் (வ. 58; யோவா. 1:1, 2, 14ஐக் காணவும்).*

*கிறிஸ்து தமது விரோதிகள் அதிகமாகப் புரிந்துகொள்ளாதவற்றைக் கூறினார், ஆனால் அந்த வேளையில் அவரது கடைசி வார்த்தைகளின் அடிப்படை வலியுறுத்தத்தை அவர்கள் புரிந்துகொண்டார்கள்: "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா. 8:58). எரியும் முட்புதரில் தேவன் மோசேயிடம் பேசியபோது, அவருடைய பெயர் என்னவென்று மோசே தேவனிடத்தில் கேட்டார். நாம், "அதற்குத் தேவன்; 'இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக' என்றார்" என்று வாசிக்கின்றோம் (யாத். 3:14). இயேசு, "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னமே நான் இருக்கிறேன்" என்று கூறியபோது, அவர் தேவனுக்கே உரித்தான மிகவும் பயபக்திக்குரிய பெயர்களில் ஒன்றை தமக்கு நடைமுறைப்படுத்தினார்.*

*கிறிஸ்துவின் உரையைக் கேட்டவர்கள் அவரது வார்த்தைகளின் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டார்கள், ஆனால் அவற்றை விசுவாசிப்பதற்கு அவர்களின் தப்பெண்ணம் அவர்களை அனுமதிக்கவில்லை. இருளாக்கப்பட்ட அவர்களின் மனங்களுக்கு, கிறிஸ்து தேவதூஷணக் குற்றம் செய்திருந்தார் என்றும் அவர் மரணத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்றும் தோன்றிற்று (இவ்வசனப்பகுதியை யோவா. 10:31, 33உடன் ஒப்பிட்டுக் காணவும்). "அப்பொழுது அவர்மேல் எறியும்படி கல்லுகளை எடுத்துக் கொண்டார்கள்,[18] இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போனார்" (யோவா. 8:59).[19] ஒருவேளை அவர் கூட்டத்தினுள் அடியெடுத்து வைத்து, நண்பர்களால் துரிதமாகச் சூழப்பட்டிருக்கலாம். எவ்வகையிலும், "அவரது வேளை இன்னும் வரவில்லையாதலால்" (வ. 20), மீண்டும் ஒருமுறை, அவர் தேவனுடைய அருளிரக்கத்தினால் பாதுகாக்கப்பட்டார்.*

மிகவும் தெளிவான ஒரு நேர்மாறைக் குறிப்பதற்காக, நாம் சிலவேளைகளில், ''இருளும் ஒளியும் போல வித்தியாசமான வகையில்'' என்று கூறுவதுண்டு. இயேசுவும் அவரது நாட்களில் இருந்த மதரீதியான அதிகாரிகளும் பகலின் வெளிச்சம் மற்றும் இரவின் இருள் போல மாறுபட்டிருந்தார்கள். அதே மாறுபாடானது இன்றைய நாட்களிலும், கர்த்தருக்கும் "சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்'' (அப். 20:30) மதத் தலைவர்களுக்கும் இடையில் நிலவுகிறது. விலகிச் செல்லும்படி வழி நடத்தப்படாதிருங்கள். கிறிஸ்து மற்றும் அவரது அப்போஸ்தலர்களின் போதனைகளை மாத்திரம் கவனியுங்கள். பதிலிகள் எதையும் ஏற்றுக் கொள்ளாதீர்கள்!

## வேறு கர்த்தரை ஏற்றுக்கொள்ளாதீர்கள் (யோவா. 9:1-41)

இயேசு தேவாலயத்தை விட்டுச் சென்ற பின்பு, "அவர் அப்புறம் போகையில் பிறவிக் குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார்" (வ. 1). இம்மனிதர் ஒரு பிச்சைக்காரராயிருந்தார் (வ. 8). பெண்களின் முற்றத்திற்குச் செல்லும் பிரதான நுழைவாயில் பிச்சை கேட்பதற்குச் சாதகமான இடங்களில் ஒன்றாயிருந்தது (அப். 3:2), அங்கு கிறிஸ்து போதித்துக் கொண்டு இருந்திருந்தார் (யோவா. 8:20[20]). வேறுவார்த்தைகளில் சொல்லுவதென்றால், கர்த்தர் தமது உயிரைக் காத்துக் கொள்வதற்குத் தப்பியோடிய வேளையில் கூட, பார்வையற்ற ஒரு மனிதரைக் குணமாக்குவதற்கு நேரம் எடுத்துக்கொண்டார் (யோவா. 9:6, 7).[21]

குணமாக்கும் இந்த நிகழ்ச்சி ஓய்வுநாளில் நடைபெற்றது (வ. 14), இது ஓய்வுநாள் பற்றிய இன்னொரு வாக்குவாதத்தைத் தூண்டிற்று.[22] இருப்பினும், இந்த வேளையில் இயேசுவல்ல ஆனால் குணமாக்கப்பட்ட அந்த மனிதனே விமர்சனத்தின் பாரமான தாக்குதலைப் பெற்றவராயிருந்தார்.[23] அவர் அதிகாரிகளால் இரக்கமற்ற வகையில் விசாரிக்கப்பட்டார்; ஆனால் அவரை அவர்கள் ஜெப ஆலயத்திற்குப் புறம்பாக்கிய போதும் கூட, அவர் தமது உறுதிப்பாட்டிலிருந்து அசைக்கப்பட முடியாதவராயிருந்தார். பிற்பாடு, கிறிஸ்து அந்த மனிதரைக் கண்டுபிடித்துத் தம்மை வெளிப் படுத்தியபோது, ''விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்'' (வ. 38).

மனதைச் சிறைப்பிடிக்கும் இந்த வரலாறு, இயேசுவின்மீது விசுவாசத்தை உண்டாக்குவதற்காக யோவானால் பதிவு செய்யப்பட்டிருந்தது (யோவா. 20:30, 31). இருப்பினும், யோவான் 9:39-41ல் உள்ள பின்தொடர்ச்சியானது, உடல்ரீதியான பார்வையற்ற தன்மையை ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையுடன் நேர்மாறான ஒப்பிடுதல் என்பது இதன் இன்னொரு நோக்கமாயிருந்தது என்பதைத் தெளிவாக்குகிறது. இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுத்தவர்கள் இதை உணர்ந்தறியவில்லை, ஆனால் அவர்கள் ஆவிக்குரிய பார்வையற்ற தன்மையில் இருந்தவர்களாய், அறியாமை, தப்பெண்ணம் மற்றும் பாவம் என்பவற்றின் இருளைத்

தோற்றுவித்துக் கொண்டிருந்தார்கள்.

இன்றைய நாட்களில் "அநேக கர்த்தாக்கள்" (1 கொரி. 8:5) நமது பற்றுறுதியைப் பெற்றுக்கொள்வதற்காகப் போட்டியிடுகின்றார்கள், ஆனால் உண்மையில் ஒரே ஒரு உண்மையான கர்த்தரே இருக்கின்றார் (எபே. 4:5). மற்ற யாவரும் "குருடருக்கு வழிகாட்டுகிற குருடராயிருக்கிறார்கள்; குருடனுக்குக் குருடன் வழிகாட்டினால் இருவரும் குழியிலே விழுவார்களே" (மத். 15:14). பதிலிகள் எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்!

## வேறு தலைவரை ஏற்றுக்கொள்ளாதீர்கள் (யோவா. 10:1-21)

பரிசேயர்களின் பார்வையற்ற தன்மை பற்றி அவர்களுக்கு இயேசு கூறிய வார்த்தைகளுக்குப் பின்பு (யோவா. 9:40, 41), உடனடியாக, அவர் நல்ல மேய்ப்பராக இருத்தல் பற்றிய உரை தொடர்ந்தது. 1ல் இருந்து 5வரையுள்ள வசனங்கள் பொதுவாக, "நல்ல மேய்ப்பனைப் பற்றிய உவமை" என்று குறிப்பிடப்பட்டுள்ளன (வ. 6ஐக் காணவும்). இது, "உவமை" என்ற சொற்றொடரை நாம், அச்சொற்றொடரானது புதிய ஏற்பாட்டில் பல்வேறு வகையான பேச்சு உருவகங்களைச் சுற்றியடக்கப் பயன்படுத்தப்படுகிறது என்ற வகையில் சிந்தையில் காத்துக்கொள்ளும் வரையிலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக உள்ளது.[24] இவ்விடத்தில் யோவான், "உவமை" என்பதற்கான கிரேக்க வார்த்தையை (parabole) பயன்படுத்தவில்லை. மாறாக அவர், ஒரு பொதுமையான வார்த்தையை (paroimia) பயன்படுத்தினார், இது "வழியின் பக்கத்தில்" என்று அர்த்தப்படுகிறது. இந்தச் சொற்றொடர், மொழியானது வழக்கமாகப் பயன்படுத்தப்படும் வகையிலின்றி வேறு சில வகையில் - வேறு வார்த்தையில் சொல்லுவதென்றால், பேச்சு உருவகத்தில் - பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிடுகிறது.[25] வசனம் 6ல், இந்த வார்த்தை NASBயில் "பேச்சு உருவகம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது; NKJVயானது "விவரிப்பு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறது.

கிறிஸ்துவின் விவரிப்பை மதித்துப் புரிந்துகொள்வதற்கு, அவரது நாட்களில் ஆடுகளைக் கவனித்தலைப் பற்றிய சில விளக்கங்கள் அவசியமாக உள்ளன.[26] பகல் வேளைகளில் ஆடுகள் மேய்ப்பர்களால் வயல்களின் திறந்த வெளிகளில் மேய்க்கப்பட்டன. இரவு வேளைகளில் ஆடுகள் பெரும்பாலும் ஒரு தொழுவத்திற்குள் அடைக்கப்பட்டன.[27] இது மேற்கூரையற்ற, ஒரு கதவு அல்லது வாயிலுடன் கூடிய ஒரு அடைப்பிடமாக இருந்தது; இது கற்களைத் தளர்வாக அடுக்கி வைத்து அல்லது முட்புதர்ச் செடிகள் நெருக்கமாக வைக்கப்பட்ட சுவர்களைக் கொண்டிருந்தது. சிலவேளைகளில் பல மந்தைகள் ஒரே தொழுவத்தில் "வாசல் காக்கின்ற ஒருவரின்"[28] பராமரிப்பின் கீழ் விடப்பட்டன, இவர் வாசலை அடைத்திடுவார். பொறுப்பாளியாய் இருப்பவர், காலையில் வாசலைத் திறந்து ஆடுகளை வெளியே செல்ல அனுமதிப்பார். ஒவ்வொரு மேய்ப்பரும் சத்தமிடுவார், அவரவரது மந்தையில் உள்ள ஆடுகள் அவரவரிடத்திற்கு

*வரும்; ஒவ்வொரு ஆடும் தனது மேய்ப்பரின் குரலை அறிந்திருந்தது. பொதுவாக, மேய்ப்பர்கள் தங்களது ஆடுகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்கள், ஆனால், எந்த ஒரு தொழிலிலும் உண்மையாக இருப்பது போன்றே, இந்தத் தொழிலிலும், ஆடுகளின் உரிமையாளர் களிடமிருந்து பெறும் கூலியில் மட்டுமே ஆர்வம் கொண்டிருந்த ஒரு சிலரும் இருந்தார்கள்.*

*இந்த விவரங்களை இயேசு, தம்மைப் பின்பற்றுகின்றவர்கள்மீதான தமது அன்பு மற்றும் கவனிப்பு ஆகியவற்றின்மீதான வல்லமை நிறைந்த ஒரு பாடத்தைப் போதிப்பதற்குப் பயன்படுத்தினார். இவற்றை அவர், தம்மையும் தேவனுடைய ஆவிக்குரிய மேய்ப்பர்களாய் இருப்பதாக உரிமைகோரிக் கொண்டவர்களையும் வேறுபடுத்தி ஒப்பிடுவதற்காகவும் பயன்படுத்தினார்.*[29]

**தேவனால் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்**

*யோவான் 10ன் விவரிப்பு வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது, இதில் கிறிஸ்து தம்மையே தொழுவத்தின் வாசல் என்றும் (வ. 7, 9), மேய்ப்பன் என்றும் (வ. 11, 14) குறிப்பிட்டார் என்றுள்ளது. அவர் இவ்விரண்டுமாக - மற்றும் இவைகளை விட அதிகமானவராக - இருக்கின்றார். ஒரு பேச்சுருவக மானது அவருடைய எல்லாத் தன்மைகளையும் கூறித் தீர்த்துவிட முடியாது.*

*“நானே வாசல்” என்று இயேசு கூறியபோது (வ. 7, 9) அவர், தாம் ஒருவரே பிதாவிடத்தில் சேரும் வழியாக இருப்பதாக வலியுறுத்தினார் (யோவா. 14:6ஐக் காணவும்). உள்ளும் புறம்பும் செல்லுதல் என்ற குறிப்பு (10:9), அவர் ஒருவரே பாதுகாப்பு மற்றும் பத்திரம் ஆகியவற்றிற்கு ஒரே வழியாக இருந்தார் (ஆடுகள் தொழுவத்தினுள் சென்றன) என்பதையும், விடுதலை மற்றும் ஏராளத் தன்மை ஆகியவற்றிற்கு (ஆடுகள் மேய்வதற்குச் சென்றன) ஒரே மார்க்கமாக இருந்தார் என்பதையும் கூறும் ஒரு உருவக வழிமுறையாக இருக்கிறது.*[30]

*வேத வசனத்தின் இப்பகுதியானது இயேசுவை ஒரு நல்ல மேய்ப்பராகச் சித்தரிப்பதால் இதைப் பெரும்பாலானவர்கள் மிகவும் நேசிக்கின்றார்கள் (வ. 11, 14; வ. 2ஐக் காணவும்). மேய்ப்பர் என்ற வகையில் கிறிஸ்து, தமது ஆடுகளை அறிகின்றார், அவைகளும் அவரை அறிகின்றன (வ. 14). அவர் தமது ஆடுகளை “அமர்ந்த தண்ணீர்கள் அண்டைக்கும், நீதியின் பாதை களிலும்” (சங். 23:2, 3) நடத்திச் செல்லுகின்றார் (வ. 13). அவரது ஆடுகள் அவருடைய குரலை அறிந்து அவரைப் பின்செல்லுகின்றன (யோவா. 10:3, 4). அவர் தமது சுயபாதுகாப்புப் பற்றியல்ல ஆனால் தமது ஆடுகளின் பாதுகாப்புக் குறித்தே அக்கறையாய் இருக்கின்றார் (வ. 10*[31]*). அவர் அவைகளைப் பாதுகாக்கின்றார் (வ. 12ல் மறைமுகமாய் உணர்த்தப் படுகிறது) மற்றும் அவைகளுக்காக மரிக்கவும் கூட மனவிருப்பம் உள்ளவ ராய் இருக்கின்றார் (வ. 11, 17, 18)!*

*வசனம் 17 மற்றும் 18ஐப் பொறுத்தமட்டில், ஜான் ஃபிராங்க்ளின் கார்ட்டர் அவர்கள், “அவர் மனவிருப்பத்துடன் மரித்தது பற்றி அல்லது அவர் ஜீவனுள்ளவராய்த் திரும்புவதற்குக் கொண்டிருந்த வல்லமையின்*

போதுமான தன்மை பற்றி வேதாகமம் முழுவதிலும் இதை விடத் தெளிவான கூற்று வேறெதுவும் இருப்பதில்லை'' என்று எழுதினார்.[32] உங்கள் வேதாகமத்தில் நீங்கள் அந்த வசனங்களை அடையாளமிட்டுக் கொள்ள விரும்பலாம். கிறிஸ்து காட்டிக் கொடுக்கப்பட்டது, விசாரிக்கப் பட்டது, மற்றும் அவரது மரணம் ஆகியவற்றை நாம் படிக்கும்போது நீங்கள் இவற்றை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். அவர் சிலுவையில் அறையப் பட்ட நிகழ்ச்சியானது, அவர் தப்பிக்க இயலாத அளவுக்கு நீதி தவறாகிய ஒரு வருத்தத்திற்குரிய நிகழ்ச்சியல்ல; அது, அவர் தமது ஆடுகளுக்காக மனவிருப்பத்துடன் தம்மையே பலியாகக் கொடுத்த நிகழ்ச்சியாக இருந்தது!

வசனம் 16ல் இயேசுவின் வார்த்தைகளினால் நாம் அகம் மகிழ வேண்டும்: "இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டு வர வேண்டும்; அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்." "வேறே ஆடுகள்" என்பது புறஜாதியாரைக் குறிப்பதாக உள்ளது - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால் இது, இந்தப் பாடத்தைப் படித்துக் கொண்டிருக்கும் உங்களில் பெரும்பாலானவர் களைக் குறிக்கிறது! கிறிஸ்து *எல்லா* மனிதர்களையும் நேசிக்கின்றார்; அவர் எல்லா மனிதர்களுக்காகவும் தமது ஜீவனைக் கையளித்தார். அவர் உலகளாவிய மேய்ப்பராக இருக்கின்றார்!

**சுயத்திற்கு ஊழியம் செய்யும் தலைவர்கள்**

கர்த்தரின் தியாகம் செய்யும் இயல்பு அவரது நாட்களில் இருந்த சுயத்திற்கு ஊழியம் செய்யும் தலைவர்களின் இயல்புக்கு நேர்மாறானதாக இருந்தது. அவர்கள் யூதர்களின்மீது தேவனுடைய மேய்ப்பர்களாக இருந்திருக்க வேண்டியிருந்தது, ஆனால் அவர்கள் தங்கள் பணிப்பொறுப் புக்களில் பரிதாபத்திற்குரிய வகையில் தோல்வியடைந்தார்கள் (எசே. 34:1-6; எரே. 33:1-6; சக. 11:4-11; மத். 9:36; மாற். 6:34 ஆகிய வசனங்களைக் காணவும்):

- அவர்கள், தேவனுடைய சித்தத்தைச்[33] செய்வதற்கு ஆவல்கொண்ட மேய்ப்பர்களாக இருப்பதற்குப் பதிலாக, மந்தைக்குள் வேறு வழியாக நுழைவதற்கு முயற்சி செய்த திருடர்களாக கொள்ளைக்காரர்களாகவும் இருந்தார்கள், அவர்கள் தங்கள் சொந்தப் [பணப்] பைகளை நிரப்புவதிலேயே ஆர்வம் கொண்டிருந் தார்கள் (யோவா. 10:1, 8).
- அவர்கள், ஆடுகளை அறிந்து அவற்றின்மீது தனிப்பட்ட ஆர்வமுள்ள மேய்ப்பர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவர்கள் மாறுபடான அந்நியர்களாக இருந்தார்கள் (யோவா. 10:5).
- அவர்கள், ஆடுகளைப் பாதுகாக்க அபாயத்தை எதிர்கொள்ளுவதற்கு மனவிருப்பமுள்ள மேய்ப்பர்களாக இருப்பதற்கு (1 சாமு. 17:34-37ஐக் காணவும்) பதிலாக, தங்கள் சொந்தப் பாதுகாப்புப் பற்றியே அக்கறை கொண்டிருந்தார்கள். அவர்கள் "கூலியாளின்" மனநிலையைக்[34] கொண்டிருந்தார்கள்; அவர்கள் ஆடுகளின்

*நலன்மீதல்ல, ஆனால் தங்கள் கூலியின்மீதே அக்கறை கொண்டிருந் தார்கள் (யோவா. 10:11, 12).*

*இன்றைய நாட்களில் உலகமானது, தங்களைச் சுற்றி ஆராதிக்கும் மந்தைகளைச் சேர்ந்துக் கொள்ள ஆவலுள்ளவர்களாய், அவர்களைத் தொடர்ந்து அபகரிக்கின்றவர்களாய் தங்களுக்கே ஊழியம் செய்து கொள்கின்ற மதத் தலைவர்களால் நிறைந்துள்ளது. வஞ்சிக்கப் படாதிருங்கள். இயேசு கிறிஸ்துவே உண்மையான மேய்ப்பராக, "பிரதான மேய்ப்பராக" (1 பேது. 5:4), "நல்ல மேய்ப்பராக" (யோவா. 10:11, 14) இருக்கின்றார்.[35] பதிலிகள் எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்.*

## *முடிவுரை*

*நாம் வேறு வெளிச்சம் எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. வேறு எந்த "வெளிச்சமும்" இருளையே கொண்டு வருகிறது. நாம் வேறு கர்த்தர் எவரையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. வேறு "கர்த்தர்" எவரும் சுயத்திற்கு ஊழியம் செய்கின்றவராகவே இருக்கின்றார். நாம் வேறு தலைவர் எவரையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது. வேறு "தலைவர்" எவரும் நம்மைத் தவறுக்கே வழிநடத்திச் செல்லுவார். இயேசுவை மாத்திரமே பின்பற்றுங் கள். பதிலிகள் எதையும் ஏற்றுக்கொள்ளாதீர்கள்!*

*கிறிஸ்து தாமே ஒளியாக, கர்த்தராக மற்றும் தலைவராக இருப்பதாக உரிமைகோருதலை ஏற்படுத்தியபோது, அவரது உரையைக் கேட்டவர் களுக்குள் பிரிவினை ஏற்பட்டது (யோவா. 10:19). சிலர், "இவன் பிசாசு பிடித்தவன், பயித்தியக்காரன்" என்று கூறிய வேளையில் (யோவா. 10:20), மற்றவர்கள் "இவைகள் பிசாசு பிடித்தவனுடைய வசனங்களல்லவே, குருடருடைய கண்களைப் பிசாசு திறக்கக் கூடுமா?" என்றார்கள் (யோவா. 10:21). ஒவ்வொரு தனிநபரும் இயேசுவைக் குறித்துத் தமது சொந்த தீர்மானத்தை ஏற்படுத்த வேண்டியவராக இருக்கின்றார். நீங்கள் அவரை உங்கள் ஒளியாக, உங்கள் கர்த்தராக, உங்கள் நடத்துனராக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்.*

*நாம் அவரை நமது ஒளியாக, கர்த்தராக மற்றும் நடத்துனராக எவ்வாறு ஏற்றுக்கொள்ளுகின்றோம்? எந்த உருவகம் ஏற்படுத்தப்பட்டிருந்தாலும், நிபந்தனைகள் ஒரே மாதிரியாகவே உள்ளன:*

- *நாம் அவருக்கு செவிகொடுக்க வேண்டும் (யோவா. 10:3-5, 16).*
- *நாம் அவரில் விசுவாசம் கொள்ள வேண்டும் (யோவா. 8:24; 9:38).*
- *நாம் அவரைப் பின்பற்ற வேண்டும் (யோவா. 10:4; 8:12), மற்றும் அவரது சித்தத்தைச் செய்ய வேண்டும் (யோவா. 8:31, 52).[36]*

*"பசுமையான புல்வெளியோ அல்லது கொடூரமான விலங்குகளோ எங்குள்ளன என்று அறிந்திருப்பவைகள் மிகச் சிறந்த ஆடுகள் அல்ல. தங்களுக்கு ஒரு மேய்ப்பன் எவ்வளவாகத் தேவை என்பதை அறிந்திருப்ப வைகளே மிகச் சிறந்த ஆடுகள்" என்று யாரோ ஒருவர் கூறினார்.[37]*

*உங்களுக்கு நல்ல மேய்ப்பர் தேவை என்பதை நீங்கள் அறிந்திருந்தால், இன்றே அவரிடம் வாருங்கள் - மற்றும் தினமும் அவரைப் பின்பற்றுங்கள்!*

## குறிப்புகள்

*இயேசு ''உலகின் ஒளியாக இருக்கின்றார்'' என்பது பற்றி ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முடியும்* (see James Burton Coffman, *Commentary on John* [Austin, Tex.: Firm Foundation Publishing House, 1974], 233-34). *யோவான் 9ன் மீதான பிரசங்கம் ஒன்று, இந்தப் பாடத்திற்குப் பின்பு வருகிறது. இயேசு "நல்ல மேய்ப்பர்" என்பது பற்றிய பிரசங்கம் ஒன்றை இதில் உள்ளடக்க நான் விரும்புகின்றேன், ஆனால் இப்புத்தகத்தின் இடப்பற்றாக்குறை என்னை அவ்வாறு செய்வதற்கு அனுமதிக்கவில்லை.*

*இந்த வேத பாடப் பகுதிக்குக் கூடுதலான பிரசங்கக் கருத்துக்கள் பின்வருமாறு: ''உண்மையில் அவர் யார்?'' என்று ஒரு பிரசங்கத்தைப் பிரசங்கிக்க யோவான் 7:25 மற்றும் 8:53 ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள். உங்கள் உரையைக் கேட்பவர்களிடத்தில், "இயேசு யார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?" என்று அறைகூவல் விடுங்கள்.*

*யோவான் 9:25ல் அந்தப் பிச்சைக்காரரின் வார்த்தைகளை நான் நேசிக்கின்றேன்: "... நான் குருடனாயிருந்தேன், இப்பொழுது பார்க்கிறேன்; இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்." நீங்கள், "இது ஒன்றுதான் எனக்குத் தெரியும்'' என்ற கருத்தின்மீது பிரசங்கிக்கலாம். நாம் எல்லாவற்றையும் அறியாதிருக்கலாம், ஆனால் பின்வரும் சத்தியங்களை நாம் அறிகின்றோம்: தேவன் நம்மீது அன்புகூருகின்றார், அவர் தமது குமாரனை நமக்காக மரிக்கும்படி அனுப்பினார், இன்னும் பிற - வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால் இது, நாம் நிச்சயமாகவே அறியக்கூடியவற்றைப் பற்றிய ஒரு எளிய பிரசங்கமாக இருக்கும்.*

*நல்ல மேய்ப்பன் என்பதன்மீதான பகுதியானது மூப்பர்களுக்கான ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட முடியும்: "மேய்ப்பராயிருத்தல் என்பது அர்த்தப்படுத்துவதென்ன?"*

---

*குறிப்புகள்*

[1]*யோவான் 9:1-10:21 வரையுள்ள நிகழ்ச்சிகள், பிரதிஷ்டைப் பண்டிகையின் போது (யோவா. 10:22) நடைபெற்றன என்று சிலர் நம்புகின்றார்கள், இது சாத்திய மானதாகவே உள்ளது. இருப்பினும், யோவா. 9 மற்றும் கூடாரங்களின் பண்டிகை மீதான அத்தியாயங்கள் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு நெருக்கமான பிணைப்பு உள்ளது (யோவா. 7:13ஐ யோவா. 9:22உடனும், யோவா. 8:12ஐ யோவா. 9:5 உட னும் ஒப்பிடவும்); யோவா. 9:1-10:21 வசனப்பகுதியானது இதே கால வேளையின் தொடர்ச்சியாகக் காணப்படுகிறது. யோவா. 8:59 மற்றும் யோவா. 9:1 ஆகியவற்றிற்கிடையில் ஒரு வகையான இடைவேளை உள்ளது, மற்றும் யூதேயா வில் பிந்திய ஊழியத்தின் சில நிகழ்ச்சிகள் அவ்விடத்தில் உட்செருகப்பட்டிருக்க வேண்டிய சாத்தியக்கூறு உள்ளது. அதை நாம் அடுத்த பாடத்தில் கலந்துரை*

யாடுவோம். [2]யோவா. 6:35; 8:12, 58; 10:11; 11:25; 14:6; 15:1 ஆகிய வசனங்களைக் காணவும். [3]நல்ல மேய்ப்பரின் விவரிப்பு தொடர்பாக இயேசு, "நானே வாசல்" என்றும் கூறினார் (10:7, 9), இது "நானே ..." என்ற கூற்றுகளுடன் சேர்த்துக் கொள்ளப்பட முடியும். [4]பெண்களின் முற்றும் என்பது தேவாலயத்தில், யூத ஆண்களும் பெண்களும் செல்லக்கூடிய பகுதியாக இருந்தது. இது தினசரி இருமுறை ஜெபிக்கும் விசேஷித்த இடமாக இருந்தது. ''கிறிஸ்துவின் வாழ்வு, 1'' என்ற புத்தகத்தில் உள்ள தேவாலயத்தின் வரைபடத்தைக் காணவும். [5]சரவிளக்கு பற்றிய விவரங்களுக்கு "ஜீவதண்ணீர்" என்ற முந்திய பாடத்தைக் காணவும். [6]H. I. Hester, *The Heart of the New Testament* (Liberty, Mo.: Quality Press, 1963), 164-65. [7]The Living Bible பொழிப்புரையைக் காணவும். இது ஒரு அமெரிக்கச் சொல் விளக்கமாக உள்ளது. நீங்கள் வாழும் பகுதியில் ஒருவேளை நீங்கள் இதற்குச் சமமான ஒன்றைக் கொண்டிருக்கலாம். [8]"அப்போஸ்தலர்" என்ற வார்த்தை "அனுப்பப்பட்ட ஒருவர்" என்ற நேரடி அர்த்தம் கொண்டுள்ளது. பன்னிருவரும் இயேசுவின் அப்போஸ்தலர்களாய் இருந்தார்கள். இயேசு, தேவனின் அப்போஸ்தலராய் இருந்தார். [9]அவரது விரோதிகள் அவரைக் குற்றம்சாட்ட முயற்சி செய்தார்கள், ஆனால் அவர் ஓய்வுநாளை மீறினார் என்று குயுக்தியாகப் பேசுதல் மட்டுமே அவர்களால் செய்ய முடிந்த மிகச் சிறந்த செயலாக இருந்தது. [10]முந்திய பாடத்தில் (''எருசலேமுக்குப் பயணப்படுதல்'') யோவா. 8:24 வசனம் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டது. இவ்வசனமானது, இயேசுவே மேசியாவாக இருந்தார் என்பதை விசுவாசிப்பதற்கான பொதுவான கூற்றாக உள்ளது, ஆனால் அதை விட அதிகமான கருத்து மறைமுகமாய்ச் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது. "அவர்" ["He"] என்ற வார்த்தை [ஆங்கில வேதாகமத்தில்] சாய்வெழுத்துக்களில் உள்ளதைக் கவனியுங்கள். கிறிஸ்துவே "நான் இருக்கிறேன்" என்பவராக - அதாவது தேவனாக - இருந்தார் என்று அவர்கள் விசுவாசிக்க வேண்டியிருந்ததாகக் கிறிஸ்து கூறினார்! (இந்தக் கூற்றை யோவா. 8:58உடன் ஒப்பிடவும்.)

[11]"அவரிடத்தில் விசுவாசம் வைத்தல்" (வ. 30) மற்றும் "தம்மை விசுவாசித்த" (வ. 31) என்பவற்றில் வேறுபாடு ஒன்றுள்ளது என்று பல எழுத்தாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றார்கள். அது சாத்தியமானதாகவே உள்ளது, ஆனால் 31ம் வசனமானது 30ம் வசனத்தின் பின்தொடர்ச்சியாகத் தோன்றுகிறது. இயேசு, தம்மில் விசுவாசம் கொள்ளத் தொடங்கியவர்கள், விசுவாசம் என்பது உண்மையில் [தங்கள்மீது] சுமத்துவது என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார் என்பது தெளிவு. [12]வேத வசனத்தின் இந்தப் பகுதியில் ''யூதர்கள்'' என்ற சொற்றொடரானது வழக்கமாக யூதத்துவத் தலைவர்களைக் குறிக்கிறது. [13]அடிக்கடி மேற்கோள் காண்பிக்கப்படும் வசனப்பகுதியானது பொதுவான சத்தியத்திற்குப் பொதுவாக நடைமுறைப்படுத்தப் படுகிறது. சந்தர்ப்பப் பொருளில் இது இயேசுவால் பேசப்பட்ட ஆவிக்குரிய சத்தியத்தை, விசேஷமாக அவர் யார் மற்றும் அவர் என்ன செய்வதற்கு வந்தார் என்பது பற்றிய சத்தியத்தைக் குறிப்பிடுகிறது. அந்த சத்தியம் அவர்களை நியாயப்பிரமாணத்தின் கொடுங்கோண்மையிலிருந்தும் அதனுடன் இணைக்கப்பட்டிருந்த மனிதப் பாரம்பரியங்கள் எல்லாவற்றிலிருந்தும் விடுதலையாக்கும். [14]இஸ்ரவேலர்கள் பாபிலோனிலும் பெர்சியாவிலும் அடிமைகளாக இருந்திருந்ததால், இது ஒரு விநோதமான உரிமைகோருதலாக இருந்தது. கிறிஸ்துவின் வாழ்நாள் காலத்தின்போது, யூதர்கள் ரோமாபுரிக்குக் கீழ்ப்பட்டிருந்தார்கள். [15]பாவத்திற்கு அடிமையாகுதல் பற்றிய இயேசுவின் கூற்று புதிய ஏற்பாட்டின் பிறபகுதிகளில் எதிரொலிக்கப்படுகிறது (ரோமர் 6:16-18). [16]யோவா. 8:44 வசனம், பிசாசு மற்றும் அவனது கிரியைகள் பற்றி வேதாகமத்தில் உள்ள மிகவும் சுருக்கமான கூற்றுகளில் ஒன்றாக உள்ளது. "ஆதிமுதலாய் மனுஷ

*கொலை பாதகனாயிருக்கிறான்" என்பது, உலகத்திற்கு மாம்சப் பிரகாரமான மரணத்தைக் கொண்டு வந்ததான, பாவம் செய்யும்படி அவன் ஏவாளைத் தூண்டியதைக் குறிப்பிடுவதாக இருக்கலாம். [17]யூதர்கள் இயேசுவை "சமாரியன்" என்று அழைத்தபோது, அவர்கள் அவரை சமாரியாவில் பிறந்து வளர்ந்தவர் என்று கருத்துத் தெரிவித்திருக்க வேண்டிய அவசிய மில்லை. மாறாக, அந்தச் சொற்றொடர் ஒரு அவமானப்படுத்தும் சொற்றொடராயிருந்தது; யூதர்கள் சமாரியர்களை வெறுத்து, தங்களைக் காட்டிலும் அவர்கள் தாழ்ந்தவர்கள் என்று நினைத்திருந்தனர். உலகின் பல பகுதிகளில், மக்கள் தாங்கள் விரும்பாத மக்களை அவர்களுக்கு வட்டாரரீதியான அடைமொழிகளைப் பயன்படுத்துகின்றார்கள். [18]தேவாலயத்தின் தரையிலிருந்து அவர்கள் கல்லுகளை எவ்வாறு பொறுக்கினார்கள்? இவ்விடத்தில் சில சிந்தனைகள் உள்ளன: (1) ஆலயத்தின் பொதுவான பகுதியானது மக்களாலும் விலங்குகளாலும் நிறைந்திருந்தது. முன்னதாக இயேசு தேவாலயத்துத் தரையின் மணலில் எழுதியிருந்தார் (யோவா. 8:6, 8). தரையானது இழுத்துச் செல்லப்பட்ட குப்பைகளால் அழுக்காகி இருக்கச் சாத்தியமுண்டு. (2) கி.மு. 20ல் ஏரோது தேவாலயத்தை மறுபடியும் கட்டுவிக்கத் தொடங்கியிருந்தார், அந்த வேலையானது இன்னமும் நடந்துகொண்டிருந்தது. கட்டுமானப் பணிகள் நடைபெறும் எந்த இடத்திலும் கற்களும் குப்பைகளும் இருப்பது வழக்கம். (3) தலைவர்கள், தங்கள் கைகளிலும் அங்கிகளிலும் கற்களை நிரப்பிக் கொண்டு தயாராக வந்திருக்கலாம். மிகச் சிறப்பான கையெழுத்துப் பிரதிகளில் காணப்படாத ஒரு சில வார்த்தைகளை* KJV *அதிகமாகக் கூட்டிக் கூறுகிறது,* [எனினும்] *இது இவ்வசனத்தின் அடிப்படை அர்த்தத்தை மாற்றுவதில்லை. [20]தருமப் பெட்டி இருக்குமிடம் என்பது பெண்களின் முற்றத்தில் ஒரு பகுதியாக இருந்தது. (தேவாலயத்தின் அந்தப் பகுதி பற்றிய குறிப்புகளை மறுகண்ணோட்டமிடவும்.)*

*[21]இந்த குணமாக்கும் நிகழ்ச்சி யோவா. 8:59ன் நிகழ்ச்சிக்குச் சற்றுப் பின்பு நடைபெற்றிருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. பல்வேறு சாத்தியக்கூறுகளை நாம் இப்பாடத்தைத் தொடர்ந்து வரும் பிரசங்கத்தில் ஆராய்வோம். [22]முந்திய வாக்குவாதங்கள் சிலவற்றை மத். 12:1-14 மற்றும் யோவா. 5:1-47 ஆகிய வசனப் பகுதிகளில் காண முடியும். [23]இவ்வரலாற்றின் விவரமான படிப்பிற்கு, அடுத்த வரும் "நான் பார்வையற்றவனாயிருந்தேன், ஆனால் இப்பொழுது நான் பார்க்கின்றேன்" என்ற பிரசங்கத்தைக் காணவும். [24]10:1-5 வசனப் பகுதியானது நுட்பமான வகையில் ஒரு ஒப்புவமையாக உள்ளது. உவமை என்பது, "விரிவாக்கப்பட்ட ஒப்புவமை" என்பதாக உள்ளது (இது வழக்கமாக, "போல்" அல்லது "ஒப்பாக" என்பது போன்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது), ஒப்புவமை என்பது விரிவாக்கப்பட்ட உருவகமாக உள்ளது (இது ஒப்பிடுதலுக்கான சொற்றொடர் எதையும் பயன்படுத்தாத ஒப்பீடாகும்). உவமை என்பது வழக்கமாக ஒரே ஒரு சத்தியத்தைப் போதிக்கிறது, ஒப்புவமை என்பது பொதுவாகப் பல சத்தியங்களைப் போதிக்கிறது. [25]இவ்வார்த்தை யோவா. 16:25, 29 மற்றும் 2 பேது. 2:22 ஆகிய வசனங்களிலும் காணப்பட முடியும். [26]உங்கள் உரையைக் கேட்பவர்கள் ஆடுகளை மேய்த்தல் பற்றி பழக்கப்பட்டிருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம். அவர்களுக்கு அது பழக்கமானதாக இருந்தால், உலகில் நீங்கள் வாழும் பகுதியில் ஆடுகளை மேய்த்தலில் உள்ள வேறுபாடுகள் எதையாவது குறிப்பிட்டு, இயேசுவின் காலத்தில் அவை எவ்வாறு இருந்தன என்பதைக் கூறுங்கள். [27]விஷயம் எப்போதுமே இவ்வாறு இருந்ததில்லை. எடுத்துக்காட்டாக, வருடத்தின் வசந்த காலத்தில், புல்லானது பசுமையாகச் செழித்து வளர்ந்திருக்கும் போது, கம்பளி மற்றும் இறைச்சி உற்பத்தியை வேகப்படுத்துவதற்காக மந்தைகள் இரவிலும் வயல்களில் விடப்பட்டிருக்கும் (லூக். 2:8). மற்ற வேளைகளில், அவைகள் இரவு நேரங்களில்*

*தொழுவத்தினுள் அடைக்கப்பட்டிருக்கும். [28]இம்மனிதரை* “the porter” *என்று* KJV *அழைக்கிறது (யோவா. 10:3). [29]மீண்டும் ஒருமுறை, முக்கியக் கருத்துக்களையே இப்புத்தகத்தின் இடம் அனுமதிக்கும். இந்தப் பகுதியை நீங்கள் விரிவாக்க விரும்பலாம். [30]எல்லாப் பேச்சுருவகங்களையும் போலவே, “உள்ளும்” மற்றும் “புறம்பும்” என்ற சொற்றொடர்கள் எல்லைக் கோடிகளுக்கு வலியுறுத்தப்படக் கூடாது; நாம் இயேசுவின் அன்பு மற்றும் பராமரிப்பிற்கு “உள்ளும் புறம்புமாக” செல்லுவதில்லை.*

*[31]யோவா. 10:10ன் கடைசிப் பகுதியானது, இயேசு இந்த உலகத்தில் வந்தது ஏன் என்பது பற்றிய மாபெரும் கூற்றுக்களில் ஒன்றாக உள்ளது: அவர் பரிபூரண ஜீவனை நமக்குக் கொண்டு வருவதற்காகவே வந்தார்! இது, நாம் ஏராளமான பணத்தையோ அல்லது இவ்வாழ்விற்குரிய மற்ற பொருட்களையோ கொண்டிருப் போம் என்று அர்த்தப்படுவதில்லை. இது, கிறிஸ்துவுக்குள்ளாக வாழ்வதே வாழத் தகுதியான வாழ்வு என்று மட்டுமே அர்த்தப்படுகிறது. [32]*John Franklin Carter, *A Layman’s Harmony of the Gospels* (Nashville: Broadman Press, 1961), 210. *[33]சட்டப்பூர்வமான, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட வாசல் வழியாக உள்நுழைதல் என்பதே நமக்குத் தேவனுடைய சித்தமாக உள்ளது. [34]பெரும்பாலான மேய்ப்பர்கள் வேறொருவரின் ஆடுகளை மேய்ப்பதற்குக் கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களாய் இருந்தார்கள். இருப்பினும், இவர்களில் பெரும்பாலானவர்கள், ஆடுகளின் நலனைத் தங்கள் இருதயங்களில் கொண்டிருந்தார்கள். இருப்பினும் ஒரு சிலர், ‘‘பணத்திற்காகவே பணியில்’’ இருந்தார்கள் மற்றும் அபாயம் வரும்போது ஓடிவிடுபவர்களாய் இருந்தார்கள். யூதத்துவ உயர் அதிகார வர்க்கத்தினர் இப்படிப்பட்டவர்களாக இருந்தார்கள் என்று இயேசு கூறினார்.* KJV *வேதாகமம் “கூலியாள்”* [“hireling”] *என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகிறது, இது கூலிக்கு அமர்த்தப்பட்டவர்களை மட்டுமின்றி, தனது கூலியில் [மாத்திரம்] ஆர்வம் உள்ளவர்களாகவும் இருந்தவர்களை மறைமுகமாக உணர்த்துகிறது. இன்றைய நாட்களில் இதைப் பற்றிய நடைமுறைப் பயன்பாடு ஒன்றை இவ்விடத்தில் ஏற்படுத்த முடியும்: மூப்பர்களுக்கும் ஊழியர்களுக்கும் அவர்களின் ஊழியத்திற்கு ஊதியம் அளித்தல் என்பது வசனரீதியானதாகவே உள்ளது (லூக். 10:7; 1 கொரி. 9:7-11; 1 தீமோ. 5:17, 18) ஆனால் மூப்பர்களும் ஊழியக்காரர்களும் “பணத்திற்காக” தங்கள் ஊழியத்தைச் செய்பவர்களாய் இருக்கக் கூடாது. [35]ஒரு சபை மூப்பர்கள் மந்தைகளைக் கண்காணிப்பவர்களாக (அப். 20:28-31) இருக்கின்ற “கீழ்நிலை மேய்ப்பர்களாக” (1 பேது. 5:1-4) இருக்கின்றனர் - அதாவது, தங்கள் பராமரிப்பில் ஒப்புவிக்கப்பட்ட குறிப்பிட்ட சபையைக் கண்காணிக்க வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் பிரதான மேய்ப்பரான கிறிஸ்துவுக்கும் அவரது வசனத்திற்கும் கீழ்ப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். [36]இவ்விடத்தில் ஏற்புடையதாக இருந்தால், விலகிப்போன பாவி, மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானப்படுதல் ஆகியவற்றின் மூலமாக (மாற். 16:15, 16; அப். 2:38) தேவனு டைய சித்தத்தைச் செய்தலும், தவறுகின்ற கிறிஸ்தவர் மீண்டும் கட்டுவிக்கப்படுதலும் (அப். 8:22; யாக். 5:16; 1 யோவா. 1:9) தேவையாயுள்ளது எவ்வாறு என்பது பற்றிய குறிப்பான அறிவுறுத்தல்களைத் தருவதற்கு நீங்கள் விரும்பலாம். [37]*Paul Brownlow, *A Shepherd’s Heart,* quoted in *The Central Concern,* weekly bulletin of the Central church of Christ, Cleburne, Tex. (20 April 2000): 2.